# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.58 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | திவ்யபாரதி |
| Father/Husband Name | மோகன்ராஜ் |
| Calling/Occupation | House Wife |
| Age | 30 |
| Address | திருவண்ணாமலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் வேலூர் சலவன்பேட்டையில் வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் மோகன்ராஜ். ஆஜர் எதிரி என் கணவரின் தம்பி. நான், என் கணவர், ஆஜர் எதிரி, என் மாமனார், மாமியார் ஆகியோர் ஒரே வீட்டில் மாடியில் நானும் என் கணவரும் வசித்து வந்தோம். கீழ் தளத்தில் மாமியார், மாமியார் மற்றும் எதிரி வசித்து வந்தார்கள். என் கணவருக்கு குடிப்பழக்கம் உண்டு. அவருக்கு De addiction centre-ல் நான் 7 மாத கர்பிணியாக இருந்தபோது சிகிச்சை அளிக்கப்பட்டது.

என் கணவர் தற்போது உயிருடன் இல்லை. திருமணத்திற்கு முன்பும் அவர் De addiction centre–ல் சிகிச்சை எடுத்து வந்ததாக சொன்னார்கள். கடந்த 07.10.2024 அன்று என் கணவர் என்னுடனும், என் மாமனார், மாமியாருடனும் சண்டை போட்டுவிட்டு போய் படுத்தவர் எழவில்லை. 08.10.2024 அன்று மாலை சுமார் 04.30 மணி அளவில் குழந்தைக்கு பால் எடுத்துக்கொண்டு வர கீழ் தளத்திற்கு போய் பால் எடுத்துக்கொண்டு மேலே வந்தபோது அவர் வைத்திருந்த மது பாட்டிலில் மது இல்லை. அதை யார் எடுத்தது என்று சண்டை போட்டு குழந்தைக்கு பால் வைத்திருந்த டம்பளரை எட்டி உதைத்து என்னிடம் சண்டை போட்டார்.

இனிமேல் நான் உன்னுடன் வாழ முடியாது என்று சொன்னார். வாழ முடியாது என்றால் நான் என் அம்மாவின் வீட்டிற்கு போகிறேன் என்று சொன்னேன். அப்படி போவதாக இருந்தால் கம்மலை கழட்டி வைத்துவிட்டு போ என்று சொன்னார். அது நீ போட்டது அல்ல மாமியார் போட்டது அவரிடம் கொடுத்துவிட்டு போகிறேன் என்று சொன்னேன். அதற்கு என் கணவர் அப்படி போவதாக இருந்தால் தாலியை கழட்டி வைத்துவிட்டு போ என்று சொன்னார். சண்டை நடந்தது கீழ் தளத்தில்.

என்னிடம் சண்டை போட்டுவிட்டு மாடிக்கு போய் போன் எடுத்துக்கொண்டு வந்து என் அப்பாவிற்கு போன் செய்கிறேன் என்று போனார். அதன் பின்னர் கீழே வந்து எல்லாருக்கும் தகவல்

சொல்லிவிட்டேன் எல்லாரும் வருகிறார்கள் இன்று எல்லாவற்றையும் முடித்துவிடலாம் என்று சொன்னார். என் மாமியார் அமைதியாக இருக்க சொன்னார். ஆனால் என் கணவர் எங்களிடம் சண்டை போட்டு என் மாமியாரை மத்தால் அடித்துவிட்டார். நான் கடைக்கு என் மாமனாருக்கு போன் செய்தேன். யாரோ போன் எடுத்தார் யார் என்று தெரியவில்லை. இரண்டாவது முறையாக போன் செய்தபோது எதிரி போன் எடுத்தார். அவரிடம் என் கணவர் எங்களிடம் சண்டை போட்டு பிரச்சினை செய்கிறார் உடனே கிளம்பி வாருங்கள் என்று சொன்னேன்.

என் மாமனாரும், எதிரியும் வீட்டிற்கு வந்தார்கள். நானும் என் மாமியாருக்கும் ஒரு அறையில் உட்கார்ந்திருந்தோம். என் கணவர் ஹாலில் உட்கார்ந்திருந்தார். நான் குழந்தையை பார்க்க வெளியில் வந்தபோது என் கணவர் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிக்கொண்டிருந்தார். குழந்தையை காப்பாற்ற வேண்டும் என்பதால் குழந்தையை காப்பாற்ற முயற்சித்தோம். அப்போது எதிரியை என் கணவர் கத்தியால் கை மற்றும் விலா எலும்பில் குத்திவிட்டார்.

அந்த நேரத்தில் குழந்தையை பிடுங்கி என்னிடம் கொடுத்து மேலே போ என்று சொன்னார்கள் நான் போய்விட்டேன். என் கணவரிடம் எதிரி நீ எப்போதும் பிரச்சினை செய்துக்கொண்டிருக்கிறாய் அதனால் நான் போலீஸ் ஸ்டேசன் போய் புகார் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு எதிரி போய்விட்டார்.

என் கணவர் என் மாமனார்மாமியார் அறைக்கு சென்று கதவை சாத்திக்கொண்டார். என் மாமனாரும் மாமியாரும் வெளியில் ஹாலில் உட்கார்ந்துக் கொண்டிருந்தார்கள். நான் குழந்தை அழுதுக்கொண்டிருந்ததால் சமாதானம் செய்துக்கொண்டிருந்தேன். சுமார் முக்கால் மணி நேரம் கழித்து என் மாமியார் கீழே இறங்கி வா என்று கத்தினார். நான் கீழே போய் பார்த்தபோது என் கணவர் தூக்கு மாட்டிக்கொண்டார் அதன் பின்னர் அவரை கீழே இறக்கி படுக்க வைத்து பார்த்தபோது அவருக்கு மூச்சு பேச்சு இல்லை. காவல் நிலையம் சென்ற எதிரி இரண்டு போலீசாரை வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். இரண்டு போலிசார் என் கணவரை பார்த்துவிட்டு எதுவும் செய்யாதீர்கள் என்று சொல்லி மேல் அதிகாரிக்கு தகவல் சொல்வதாக சொன்னார்கள்.

பின்னர் என் கணவர் தூக்கு மாட்டிக்கொண்டு கயிறு மற்றும் குழந்தைக்கு தொட்டில் கட்டுவதற்காக வைத்திருந்த புடவை ஆகியவற்றையும் கத்தியையும் போலீசார் எடுத்துக்கொண்டார்கள். என் கணவரின் இறப்புக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை. எதிரியின் செய்கையால் என் கணவர் இறக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆனால் அந்த புகாரை நான் எழுதவில்லை. யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. மறுநாள் காலை காவல் நிலையத்தில் கையொப்பம்

போடச்சொன்னார்கள். நான் இருந்த நிலைமையில் நான் படித்து பார்க்கவில்லை. **புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் சம்பவத்தன்று நடந்த சம்பவத்தில் எதிரி என் கணவரின் கழுத்தில் மஞ்சள் கலர் நைலான் கயிற்றால் புடவையுடன் சேர்ந்து இருக்கியதை நான் பார்த்தேன் என்றும் அதற்கு முன்பு எதிரி என் கணவரை அடித்து கீழே தள்ளி இரண்டு கால்களையும் புடவையால் வைத்து கட்டி அதன் பின்னர் கழுத்தை மஞ்சள் கலர் நைலான் கயிற்றால் இருக்கினார் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லிவிட்டு எதிரி என் கணவரின் உடன் பிறந்தவர் என்பதாலும் கணவர் வீட்டார் கொடுத்த அழுத்தத்தின் காரணத்தாலும் என் குழந்தையின் எதிர்காலத்தின் நலனை கருதி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி என் கணவரிடம் சண்டை எதுவும் போடவில்லை. என் கணவர்தான் எதிரியிடம் சண்டை போட்டு அவரை குத்தினார். என்

கணவர் De addiction centre ல் சிகிச்சை பெற்ற பின்னரும் குடிப்பழக்கத்தை நிறுத்தவில்லை. வீட்டில் குடித்துவிட்டு வந்து அடிக்கடி சண்டை போடுவது, என்னையும் என் மாமனார் மற்றும் மாமியாரையும் அவர் அடிப்பதை வழக்கமாக வைத்திருந்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு 7ம் தேதி குடித்துவிட்டு வந்து என் கணவர் சண்டை போட்டபோது அதை கேட்ட என் மாமனாரையும் என் கணவர் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் என்ன சொன்னேனோ அதைத்தான் போலீசார் விசாரித்தபோதும் சொன்னேன். குழந்தையை கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியபோது நாங்கள் காப்பாற்ற முயற்சித்து அப்போது எதிரியை என் கணவர் கத்தியால் குத்தியபோது இரவு சுமார் 07.15–07.30 மணி இருக்கும். இரவு சுமார் 08.15 மணிக்குத்தான் என் மாமியார் அலறல் சத்தம் கேட்டு நான் கீழே வந்தேன். வீட்டிற்கு வந்த இரண்டு போலீசார் என் கணவர் கத்தியால் குத்தியதால் எதிரிக்கு இரத்தக்காயம் ஏற்பட்டு அந்த இரத்தக்காயத்தோடு இரத்தக்கறை படிந்த துணியோடுதான் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். மறுநான் என்னை காவல் நிலையம் வரச்சொல்லி கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.03.23 18:05:10 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.58 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.2)

| | |
|---|---|
| Name | சரஸ்வதி |
| Father/Husband Name | சண்முகம் |
| Calling/Occupation | House Wife |
| Age | 62 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் வேலூர் சலவன்பேட்டையில் வசிக்கிறேன். ஆஜர் எதிரி என் இளைய மகன். இறந்துபோன மோகன்ராஜ் என் பெரிய மகன். அ.சா.1 என் மருமகள். என் மகன் மோகன்ராஜ்க்கு குடிப்பழக்கம் இருந்தது. அடிக்கடி குடித்துவிட்டு தினமும் வீட்டில் தகராறு செய்வார். என் மகன் மோகன்ராஜ் இறந்துவிட்டார். அவர் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்துவிட்டார். என் மகன் மோகன்ராஜ் என்னிடமும் என் மருமகளிடமும் சண்டை போட்டு குழந்தை

கழுத்தில் கத்தியை வைத்தார் எங்களுக்கு பயமாகிவிட்டது. அதனால் மருமகள் என் கணவருக்கு போன் செய்து தகவல் சொன்னதின் பெயரில் எதிரியும் என் கணவரும் வீட்டிற்கு வந்தார்கள். ஏன் இவ்வாறு செய்கிறாய் உன்னால் தினமும் தொல்லையாக உள்ளது என்றும் என் கணவரும் எதிரியும் கேட்டார்கள். உடனே என் மகன் மோகன்ராஜ் எதிரியை கத்தியால் கை மற்றும் வயிற்றில் குத்திவிட்டார். காவல் நிலையத்தில் பிடித்து கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு எதிரி காவல் நிலையம் போனார். நான் கிச்சன் ரூமில் இருந்தேன், என் கணவர் சோபாவில் ஹாலில் படுத்திருந்தார் எங்கள் அறைக்குள் போன என் மகன் மோகன்ராஜ் தூங்கியிருப்பார் என்று நினைத்தேன்.

வேலையை முடித்துவிட்டு அறைக்குள் சென்று பார்த்தபோது என் மூத்த மகன் மோகன்ராஜ் தூக்கு மாட்டியிருந்தார். நான் கத்தினேன் அதை பார்த்து மாடியிலிருந்து மருமகளும் ஹாலில் இருந்த என் கணவரும் வந்தார்கள். கீழே இறக்கி பார்த்தபோது உயிர் இல்லை. அதற்குள் எதிரி இரண்டு போலீசாரை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவர்கள் மோகன்ராஜ்–ஐ பார்த்துவிட்டு அவரை தொடாதீர்கள் என்று சொல்லிவிட்டு அங்கு வந்த இரண்டு போலிசார் எதிரியை இரத்தக்காயம் மற்றும் இரத்தம் படிந்த துணியுடன் அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். என்னுடைய மூத்த மகனின் இறப்பிற்கு எதிரி

காரணம் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுக்க எதிரிதான் சென்றார். என் மகன் இறந்த பின்னர் யார் புகார் கொடுத்தார்கள் என்று தெரியாது. என்னை போலிசார் விசாரித்தார்கள். நாங்கள் எவ்வளவோ சொல்லியும் போலீசார் கேட்கவில்லை. நீங்கள் தான் சாகடித்துவிட்டீர்கள் என்று சொல்லி எதிரியை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ஏன்டா இப்படி குடித்துவிட்டு வந்து தினமும் தொல்லை செய்கிறாய் என்று கேட்டது மட்டும்தான் வேறு எந்த தவறும் எதிரி செய்யவில்லை. அவரால் என் மூத்த மகன் இறக்கவில்லை.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் சம்பவத்தன்று நடந்த சம்பவத்தில் எதிரி என் மூத்த மகன் கழுத்தில் மஞ்சள் கலர் நைலான் கயிற்றால் புடவையுடன் சேர்ந்து இருக்கியதை நான் பார்த்தேன் என்றும் அதற்கு முன்பு எதிரி என் மூத்த மகனை அடித்து கீழே தள்ளி இரண்டு கால்களையும் புடவையால் வைத்து கட்டி அதன் பின்னர் கழுத்தை மஞ்சள் கலர் நைலான் கயிற்றால் இருக்கினார் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லிவிட்டு எதிரி என் இளைய மகன் என்பதாலும் எதிரி கொடுத்த அழுத்தத்தின் காரணத்தாலும் என் பேரனின் எதிர்காலத்தின் நலனை கருதி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்கண்ட முதல் விசாரணையில் சொன்ன சங்கதியைத்தான் நான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். பிரேதத்தை மருத்துவமனைக்கு பிரேதத்தின் கழுத்தில் இருந்த நைலான் கயிறு மற்றும் புடவை மற்றும் கத்தி ஆகியவற்றை போலிசார் எடுத்துக்கொண்டு போனார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.03.23 18:06:11 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.58 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.3)

| | |
|---|---|
| Name | சண்முகம் |
| Father/Husband Name | லோகநாதன் |
| Calling/Occupation | கூலி |
| Age | 67 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் வேலூர் சலவன்பேட்டையில் வசிக்கிறேன். ஆஜர் எதிரி என்னுடைய இளைய மகன். இறந்துபோன மோகன்ராஜ் என்னுடைய பெரிய மகன். அ.சா.1 திவ்யபாரதி என்னுடைய மருமகள். அ.சா.2 சரஸ்வதி என் மனைவி. என் மகன் மோகன்ராஜ்க்கு குடிப்பழக்கம் இருந்தது. அடிக்கடி குடித்துவிட்டு தினமும் வீட்டில் தகராறு செய்வார். என் மகன் மோகன்ராஜ் இறந்துவிட்டார். அவர் சண்டை போட்டு தூக்கு மாட்டிக்கொண்டு இறந்துவிட்டார்.

என் மகன் மோகன்ராஜ் என் மனைவி மற்றும் என் மருமகளிடமும் சண்டை போட்டு குழந்தை கழுத்தில் கத்தியை வைத்தார் எங்களுக்கு தகவல் வந்தது. அதனால் நானும் எதிரியும் வீட்டிற்கு சென்றோம். ஏன் இவ்வாறு செய்கிறாய் உன்னால் தினமும் தொல்லையாக உள்ளது என்றும் நானும் எதிரியும் கண்டித்தோம். உடனே என் மகன் மோகன்ராஜ் எதிரியை கத்தில் கை மற்றும் வயிற்றில் குத்திவிட்டார். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறேன் சொல்லிவிட்டு எதிரி காவல் நிலையம் போனார்.

என் மனைவி கிச்சன் ரூமில் இருந்தேன், நான் சோபாவில் ஹாலில் படுத்திருந்தேன். எங்கள் அறைக்குள் போன என் மகன் மோகன்ராஜ் தூங்கியிருப்பார் என்று நினைத்திருந்தோம். என் மனைவி வேலையை முடித்துவிட்டு அறைக்குள் சென்று பார்த்தபோது என் மூத்த மகன் மோகன்ராஜ் தூக்கு மாட்டியிருந்தார். என் மனைவி கத்தினார் அதை பார்த்து மாடியிலிருந்து மருமகளும் ஹாலில் இருந்த நானும் சென்று பார்த்தோம். கீழே இறக்கி பார்த்தபோது உயிர் இல்லை. அதற்குள் எதிரி இரண்டு போலீசாரை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவர்கள் மோகன்ராஜ்–ஐ பார்த்துவிட்டு அவரை தொடாதீர்கள் என்று சொல்லிவிட்டு அங்கு வந்த இரண்டு போலிசார் எதிரியை இரத்தக்காயம் மற்றும் இரத்தம் படிந்த துணியுடன் அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். என்னுடைய மூத்த மகனின் இறப்பிற்கு எதிரி காரணம் இல்லை.

என் மகன் இறந்த பின்னர் யார் புகார் கொடுத்தார்கள் என்று தெரியாது. என்னை போலிசார் விசாரித்தார்கள். நாங்கள் எவ்வளவோ சொல்லியும் போலீசார் கேட்கவில்லை. நீங்கள் தான் சாகடித்துவிட்டீர்கள் என்று சொல்லி எதிரியை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ஏன்டா இப்படி குடித்துவிட்டு வந்து தினமும் மனைவி, குழந்தை என்னை மற்றும் என் மனைவியை அடிக்கிறாயே என்று கேட்டது மட்டும்தான் வேறு எந்த தவறும் எதிரி செய்யவில்லை. அவரால் என் மூத்த மகன் இறக்கவில்லை.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் சம்பவத்தன்று நடந்த சம்பவத்தில் எதிரி என் மூத்த மகன் கழுத்தில் மஞ்சள் கலர் நைலான் கயிற்றால் புடவையுடன் சேர்ந்து இருக்கியதை நான் பார்த்தேன் என்றும் அதற்கு முன்பு எதிரி என் மூத்த மகனை அடித்து கீழே தள்ளி இரண்டு கால்களையும் புடவையால் வைத்து கட்டி அதன் பின்னர் கழுத்தை மஞ்சள் கலர் நைலான் கயிற்றால் இருக்கினார் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லிவிட்டு எதிரி என் இளைய மகன் என்பதாலும் எதிரி கொடுத்த அழுத்தத்தின் காரணத்தாலும் என் பேரனின் எதிர்காலத்தின் நலனை கருதி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்கண்ட முதல் விசாரணையில் சொன்ன சங்கதியைத்தான் நான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். பிரேதத்தை மருத்துவமனைக்கு பிரேதத்தின் கழுத்தில் இருந்த நைலான் கயிறு மற்றும் புடவை மற்றும் கத்தி ஆகியவற்றை போலிசார் எடுத்துக்கொண்டு போனார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.03.23 18:06:24 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.58 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.4)

| | |
|---|---|
| Name | விஜய்குமார் |
| Father/Husband Name | தேவராஜ் |
| Calling/Occupation | காய்கறி கடை |
| Age | 49 |
| Address | சலவன்பேட்டை, வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் வேலூர் சலவன்பேட்டையில் வசித்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். மோகன்ராஜ் இறந்த இடத்தை போலீசார் பார்த்தார்கள். படம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தேதி, மாதம், வருடம் நினைவில்லை. **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2.** நானும் பிரபு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அந்த வழியாக சென்றபோது வீட்டின் வெளியே என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் நான் வீட்டிற்குள் சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.03.23 18:06:29 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.58 of 2025
Prosecution Witness No.P.W.5 (L.W.8)

| | |
|---|---|
| Name | ரீனா |
| Father/Husband Name | முகமது அலிம் சலீம் |
| Calling/Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 48 |
| Address | அல்லாபுரம் கிராம நிர்வாக அலுவலகம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.03.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது அல்லாபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் 09.10.2024 அன்று நான் தென் வேலூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். ஆஜர் எதிரியை தெரியும். தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் எனக்கு போன் செய்து அம்மனாங்குட்டை சுடுகாட்டிற்கு இந்த கொலை வழக்கு சம்பந்தமாக வரச்சொன்னதின் பெயரில் நானும் என் உதவியாளரும், அன்று மாலை சுமார் 05.00 மணிக்கு சென்றோம். அங்கு போலிசாரும் ஆஜர்

எதிரியும் இருந்தார்கள். எதிரியை போலீசார் விசாரித்தனர். எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்து அதில் ஆஜர் எதிரி மற்றும் எங்களிடம் ஒப்பம் பெற்றனர். பின்னர் அதன் அடிப்படையில் எதிரியின் வீட்டிற்கு சென்று இரத்தக்கறை படிந்த புடவை, மஞ்சள் கலர் நைலான் கயிறு, கத்தி ஆகியவற்றை ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் மகசர் மூலம் கைப்பற்றினார்.

மேலும் ஒரு டீ சர்ட், ஒரு சார்ட்ஸ் ஆகியவற்றையும் கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தி, மஞ்சள் கலர் நைலான் கயிறு, சிமெண்ட் கலர் புடவை, புளூ கலர் டீ சர்ட், சார்ட்ஸ் ஆகியவைகள் **சா.பொ.1 முதல் சா.பொ. 5** ஆகும். **கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.3.** பின்னர் நாங்கள் அலுவலகம் சென்றுவிட்டோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மஞ்சள் நைலான் கயிறு மற்றும் சிமெண்ட் சிவப்பு கலர் புடவை கைப்பற்றியதாக சொல்லும் நான் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

என்னுடைய அலுவலகத்திலிருந்து அம்மனாங்குட்டை சுடுகாடு சுமார் 3 கி.மீ தொலைவில் இருக்கும். அந்த சுடுகாடு என்னுடைய எல்லைக்குட்பட்டது. மாலை சுமார் 05.45 மணிக்கு அம்மனாங்குட்டை சுடுகாட்டிற்கு சென்றோம். தகவல் கிடைத்த நேரம் மாலை 05.00 மணி. அம்மனாங்குட்டை சுடுகாட்டை சுற்றி நான்கு பக்கமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இடம் ஆட்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான்.

நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பே பொதுமக்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் செல்வதற்கு முன்பே எல்லாம் எழுதி வைத்துவிட்டு கையொப்பம் மட்டும் வாங்கினார்கள் என்றால் விசாரணை செய்த பின்னர்தான் கையொப்பம் வாங்கினார்கள். எதிரியை எங்கிருந்து அந்த இடத்திற்கு அழைத்து வந்தார்கள் என்று தெரியாது. நான் சொல்வது போல் என் முன்பு எந்த விசாரணையும் எதிரியை செய்யவில்லை என்றும் அவர் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அவர் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும் என்னை காவல்நிலையம் வரவழைத்து கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.03.23 18:06:47 +0530